**<u>2025 ஆகஸ்ட் மாதம் 26 – ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>O.S. நெம்பர் : 56/2019</u>**

O.S. No.: 56/2019 – பரஞ்சோதி PW1 26.08.2025

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு முதல் திருமணம் 1978ம் வருடம் நடைபெற்றது. எனது முதல் மனைவி பெயர் காளியம்மாள் என்றால் சரிதான். காளியம்மாளுக்கும் எனக்கும் பிறந்த வாரிசுகள் தான் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனக்கும் 2ம் மனைவிக்கும் பிறந்த பிள்ளைகள் தான் 3, 4 வாதிகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பாண்டியம்மாளுக்கு எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி திருமணத்திற்கு பின்பு என்னுடன் தான் 8 வருடங்கள் கூட்டுக்குடும்பமாக 1ம் பிரதிவாதியும், மற்ற பிரதிவாதிகளும், நாங்களும் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். பாண்டியம்மாளின் கணவர் எனது முதல் மனைவியின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நான், எனது முதல் மனைவி, 1ம் பிரதிவாதி மற்றும் எனது பிள்ளைகள் கூட்டுக்குடும்பமாக இருக்கும்போது, 1 முதல் 6 லக்க சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் ஒரு சொத்தை மட்டும் கிரையம் பெற்றேன். மேற்படி சொத்தை 1989ம் ஆண்டு கிரையம் பெற்றேன். 1989ம் ஆண்டு மூன்று ஆவணங்களின் அடிப்படையில் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் கூட்டுக்குடும்பமாக இருக்கும்போது எனது பெயரில் வாங்கினேன் என்றால்

நானாக சம்பாதித்து வாங்கினேன். பிரதிவாதிகளும் நானும் கூட்டுக்குடும்பமாக இருந்தபோது, பிரதிவாதிகளும் வேலை பார்த்து அவர்கள் சம்பாதித்த பணத்தை என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் என் வசம் இருந்தது, அதைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணமானது 2013 ம் வருடம் முதல் என் வசம் இருந்து வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி ஏ, பி, சி என மூன்று பிரிவுகளாக சொத்துக்களை பிரித்துள்ளேன் என்றால் சரிதான். சி செட்டியூல் சொத்து ஒதுக்கப்பட்ட கண்ணன் மாற்றுத்திறனாளி என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் இரண்டு அசலாக தயார் செய்யப்பட்டு, ஒரு அசல் ஆவணம் என் வசமும், மற்றொரு அசல் ஆவணம் பிரதிவாதிகள் வசமும் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் நம்மில் 1ம் நபர் பேரில் பட்டா ஏற்பட்டும், நம்பொதுவாக வைத்து அனுபவித்து கொண்டும், நம் அனைவருக்கும் பாத்தியப்பட்டு இருந்த வருகின்ற கீழ்கண்ட சொத்தை நம் தனித்தனியே பாகம் பிரித்து அனுபவித்து வரவேண்டும் என்று, விரும்பி நாமும், நம் உறவினர்களும் மற்றும் பெரியவர்களை வைத்து பேசி முடித்து, நாம் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு கீழ்கண்டவாறு ஏ, பி, சி பிரிவுகளாக பிரித்துக்கொண்டோம் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை, கையொப்பம் போடச் சொன்னார்கள், போட்டேன். ஏ செட்டியூல் சொத்தில் உள்ள வீடுகள் எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வீரப்ப ஐயனார் கோவில் கிராம சர்வே எண்.1176-ல் உள்ள 3 ஏக்கர் புன்செய் நிலம் எனது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். பி செட்டியூல் சொத்தானது பாகப்பிரிவினை ஆவணத்தின் படி அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி 2013ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்திற்கு பிறகு பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் அவரவர்கள் அனுபவத்து வருகிறார்கள் என்றால் சரிதான். பாகப்பிரிவினை ஆவணத்திற்கு முதல்நாள் ஓர் ரத்து பத்திரம் போட்டுக்கொண்டோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.17 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.17 ஆவணம் 23.10.2013ம் ஆண்டு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் கிரைய ஆவணம் ஏற்பட்டு, எனது 2வது மனைவிக்கு நான் தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த பத்திரத்தை நான் ரத்து செய்துள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.17 ஆவணம் நடைமுறைக்கு வராமல் இருந்து வந்ததன் அடிப்படையில் மேற்படி ஆவணத்தை ரத்து செய்து, பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ லோன் வாங்குவதற்காக நான் எந்த வங்கிக்கு சென்றேன், யாரை பார்த்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். லோன் வாங்க வேண்டும் என்றால் குறிப்பிட்டு ஆவணத்தை ஓர் நபர் பெயரில் ஏற்படுத்தி அதன் அடிப்படையில் தான் லோன் வழங்குவார்கள் என்றால் சரிதான். எப்போதும் பிரதிவாதிகள் என்னை லோன் வாங்குவதற்காக அழைத்து செல்லவில்லை என்றும், முறையாக குடும்ப உறுப்பினர்களுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற நோக்கத்திற்காக பொய்யான குற்றச்சாட்டுக்களையும், சங்கதிகளையும் பிராதில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. 23.10.2013ம் தேதி ஏற்பட்ட தானசெட்டில்மென்ட் ரத்து பத்திரமும், 24.10.2013ம் தேதி ஏற்பட்டுள்ள பாகப்பிரிவினை ஆவணமும் எனக்கும், எனது 2வது மனைவிக்கும் மற்றும் வாரிசுகளுக்கும் நன்கு

தெரியும் என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.08.2025 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2025.08.26 18:56:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
26.08.2025.